நாள் 09.06.2023 O.S. 295 of 2019 வா.சா.1 அண்ணாத்துரை

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமானம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

என் தகப்பனார் பெயர் முத்தையா கோனார்,. என் அப்பாவின் அப்பா பெயர் முத்து கோனார். என் தாத்தா முத்துகோனருக்கு சுப்பையா கோனார், அருணாசல கோனார் என்று 2 மகன்களும், பெண்கள் 2 பேர் அவர்கள் சுப்பம்மாள், திருமலை வடிவு ஆவார்கள். இந்த வழக்கில் எத்தனை சொத்தக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் ஒரேதபசில் தான் காட்டப்பட்டுள்ளது. இந்த வழக்கில் நான் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சுப்பம்மாள் பேத்தி என் இடத்தில் பாத்தியதை கொண்டாடி வருகிறார். அவருக்கு இல்லை என கட்சி செய்கிறேன். என் தாத்தா முத்து கோனருக்கு சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்றால் 1929ம் ஆண்டு ஏற்பட்ட உடன்படிக்கை மூலமாக எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்டதாக கட்சி செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ1 பாக உடன்படிக்கை நகல் என்றால் சரிதான். என் தாத்தா முத்து கோனார் பாகத்திற்கு வந்த சொத்தை தான் பிராது 1ம் தபசிலாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். பிராதில் 1ம் தபசிலாக காட்டப்பட்டுள்ள சொத்து வா.சா.ஆ1ல் இல்லை என்றால் சரியல்ல. முத்துகோனார் இறந்தபிறகு அவரது வாரீசுகளுக்கு இடையே எழுத்து பூர்வமாக எந்தவித பாகபிரிவினையும் நடக்கவில்லை என்றால் சரிதான். வாய்மொழியாக நடக்க வில்லை என்றால் சரியல்ல. வாய்மொழியாக நடந்தது. நான் சொல்வது போல் வாய்மொழி பாகபிரிவினை அனுசரித்து தனிதனியாக பட்டா ஏற்படவில்லை என்றால் சரிதான். வாய்மொழி பாகம் நடந்ததாக என் பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பிராதில் சொல்லியுள்ள விபரம் சரியானது என்றால் சரிதான். பிராது 1ம் அயிட்ட சொத்தில் மத்தியில் உள்ள சொத்தை என்தாத்தா முத்து கோனார் அவரது மகள் சுப்பம்மாளுக்கு நன்கொடை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த சொத்தில் எனக்கு எந்தவித பாத்தியதையும் கிடையாது என்றால் சரிதான். அதுபோக பிராது 1ம் தபசில் சொத்தில் இதர சொத்துக்கள் பிரிக்கப்படாமல் பொதுவாக உள்ளது என்றால் சரிதான்.

சுப்பம்மாளுக்கு நன்கொடை கொடுத்தசொத்திற்கு கீழ்பக்கம்யார் உள்ளார் என்றால் ஆவுடையம்மாள் உள்ளார். ஆவுடையம்மாள் இடத்திற்கு கீழ்பக்கம் வடகாசியம்மன் மாரியம்மன் கோவில் உள்ளது. அது ஊர் கோவிலாகும். ஊர்மக்கள் தாவா 2ம் தபசில் நடைபாதை வழியாக கோவிலுக்கு செல்வதை நான் ஆட்சேபனை செய்ததால் போலீஸ் பிரச்சனை ஏற்பட்டது என்றால் ஊருக்கும் இடத்திற்கும் சம்பந்தம் இல்லை. கேட்டை போட்டதால் பிரச்சனையானது. பிராது 2ம் தபசில் சொத்தின் கிழமேல் அளவு எவ்வளவு என்றால் கிழமேல் 9 தச்சுமுழம் தென்வடல் 42 தச்சுமுழம் எங்களுக்குள் தாவா. நான் சொன்ன மேற்படி அளவுகள் வா.சா.ஆ1 பாக பத்திரத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் திருமலைவடிவம்மாளின் வாரீசுகளை நான் கட்சிசேர்க்கவில்லை என்றால் சரிதான். சுப்பம்மாளுக்கு நன்கொடை இடத்திற்கு தென்பக்கம் உள்ள இடத்தை கிருஷ்ணகோனாருக்கும், முத்துகோனாருக்கும் 2 கிரையங்கள் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் மேற்படி நபர்களுக்கு கொடுத்த கிரைய ஆவணத்தின் நகல்எடுத்து பார்க்கவில்லை என்றால் சரிதான். அந்தகிரைய ஆவணங்களில் சொல்லியுள்ள எல்கை மால்கள் தவறு என்று நான் என் பிராதில் சொல்லியுள்ளது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் நகல் எடுத்து பார்க்கவில்லை. அந்த கிரையங்களில் வடபாதி இடத்தில் முத்துகோனார் வீடு கட்டியுள்ளார் என்றால் முத்துக்கோனாரின் வாரீசுகளில் ஒருவர் மட்டுமே வீடு கட்டியுள்ளார். மீதி இடம் உள்ளது. அந்த வீட்டின் வாசல் கிழக்கே பார்த்தது என்றால் சரிதான். அந்த வீட்டின் தென்வடல் நடைபாதைஎன்றால் சரியல்ல. அது எங்களுக்குபாத்தியப்பட்ட இடம் ஆகும். அதற்கு தெற்குபுறம் தான் கிழமேல் தெரு உள்ளது என்றால் சரிதான். பிராது 2ம்தபசில் வழியாக சுப்பம்மாள் இடத்திற்கு சென்று புழங்கி வருகிறார் என்றால் முத்துகோனாருக்கு 3 அடி இடம் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த 3 அடி இடத்தின் வழியாக தெருவிற்கு சென்று வருகிறார். முத்துகோனார் இடத்திற்கு கிழக்கே 3 அடி நடைபாதைக்கு எழுதிக்கொடுத்ததாக நான்

வழக்கிற்காக பொய்யாகசொல்லுகிறேன் என்றால் சரியல்ல. என் தாத்தா முத்துகோனாருக்கு கிழமேல் எத்தனை தச்சுமுழம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் கிழமேல் 9 தச்சுமுழம் எழுதிக்கொடுத்துள்ளார். நான் அளந்துபார்க்கவில்லை என்றால் சரிதான்.நான் கிழமேல் எவ்வளவு இடம் என அளந்து பார்க்கவில்லை என்றால் சரிதான். முத்துகோனார் எழுதி கொடுத்த இடத்திற்கு கீழ்புறம் 10அடி இருக்கும் என்றால் சரியல்ல 12 அடி இருக்கும். தென்வடல் 115 அடி இருக்கும். தாவா சொத்திற்கு என் பெயரிலோ, 2ம் வாதி பெயரிலோ தனிபட்டா கிடையாது என்றால் சரிதான். தாத்தா பெயரில்தான் உள்ளது.தீர்வை செலுத்தி வருகிறேனா என்றால் கொஞ்சநாட்கள் போட்டேன். தற்போது4,5 வருடம் கட்டவில்லை. கட்டிய ரசீதுகள் உள்ளது. நான் தீர்வை செலுத்தவில்லை என்றாலும், அனுபவம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

(பிரதிவாதிகள் தரப்புவழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)